பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 மார்கழி 13 இதழ் 313
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22-12-80

## ரயில் தடம்புரண்டது! மட்டக்களப்புசேவை பாதிப்பு!

(கொழும்பு)

ஏறாவூருக்கும் மட்டக்களப்புக்குமிடையே ரயில் தடம் புரண்டதால் கிழக்கு மாகாண ரயில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

இதன் காரணமாக நேற்று மட்டக்களப்புக்கு பயணமான பிரயாணிகள், ஏறாவூரிலிருந்து மட்டக்களப்புக்கு பஸ்ஸில் கொண்டுசெல்லப்பட்டனர். இதேபோல மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட பிரயாணிகள் நேற்று மட்டக்களப்பிலிருந்து ஏறாவூர்வரை பஸ்ஸில் கொண்டுசெல்லப்பட்டு ஏறாவூரிலிருந்து ரயில் - சேவை நடத்தப்பட்டது.

# கூட்டணியின் கிராமயாத்திரை:
# பெப்ரவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யும பொழுது, அவர் கலந்து கொள்ளும் உத்தியோக பூர்வமான கூட்டங்களில் மட்டும் தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பிக்களை அனுமதிப்பது என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

கூட்டணியின் பொதுச்சபைக்கூட்டத்தை பட்டிருப்பில் நடத்துவதைத்தொடர்ந்து பெப்ரவரிமாதம் இரண்டாம் திகதி பட்டிருப்பில் இருந்து கிழக்கு மாகாணம் முழுக்க கிராமயாத்திரை மேற்கொள்வதென்றும் இதனைத்தொடர்ந்து மார்ச்17ம் திகதி நெடுந்தீவிலிருந்து வடபகுதி முழுக்க கிராம யாத்திரை மேற்கொண்டு கூட்டணியை பலப்படுத்துவதென்றும் செயற்குழு முடிவு செய்துள்ளது.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் கூட்டணி தலைவர் திரு. மு. சிவசிதம்பரத்தின் கொழும்பு வாசஸ்தலத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கூட்டணியின் தொகுதி அமைப்பு வேலைகளை விஸ்தரிப்பது பற்றியும், இயக்க அமைப்பு, மாநில மகாநாடு பற்றியும் ஆராயப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தை பெப்ரவரிமாதம் முதலாம் திகதி பட்டிருப்பு எம் பி. திரு. பி. கணேசலிங்கத்தின மட்டக்களப்பு இல்லத்தில் நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

முன்னாள் செனட்டர் திரு சு. நடராசவின வேண்டுகோளு கிணங்க கூட்டணியை பலப்படுத்தும் நோக்கத்துடன் கூட்டணியின் தீவாதிகள் குழுவை சந்திப்பதென்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

கூட்டணியின் மூலக்கிளைகள் வட்டக்கிளைகளை புதிதாக அமைக்கும் வேலைகளைப் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிப்பதென்றும் முதலாவதாக பொத்துவில் தொகுதியிலேயே அமைப்பு வேலைகளை மேற்கொள்வதெனறும, பின்னர் அவ்வமைப்பு வேலைகளை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு, வவனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் ஏனைய பகுதிகளிலும் தொடர்ந்து மேற்கொள்வதெனறும் இச்செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது [ம]

## வட்டுக்கோட்டை தபாலக கொள்ளை
## கொள்ளையின்போது தொலைபேசி துண்டிப்பு?
### சந்தியில் காலை 7மணிமுதல் காத்திருந்தனராம்

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டைத் தபால் நிலைய கொள்ளையில் சம்பந்தப்பட்ட நான்கு இளைஞர்களும் சம்பவதினம் அதிகாலை 7 மணி முதல் வட்டுக்கோட்டைச் சந்தியில் காத்திருந்தனரென்றும் நீண்டநேரமாக இவர்கள் அங்கிடக்கில் நடமாடியதை அவதானித்த அவ்வூர்மக்கள் அவர்கள் மீது சந்தேகம் கொண்டு விசாரித்தபோது வட்டாரக்கல்வி அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்காகத் தாம் நிற்பதாக அவர்கள் தெரிவித்தனர் என்றும் கூறப்படுகிறது

காலை முதல் கொள்ளையர்கள் வட்டுக்கோட்டைச் சந்தியில் கட்டப்பட்டிருக்கும் பஸ்தரிப்பு நிலையத்தில் நின்றனராம்.

காலை 10-30 மணியளவில் மொறிஸ் மைனர் கார் ஒன்

(8-ம் பக்கம் பார்க்க)

## பேசாலைக் கடலில் இந்திய மீனவர் கொள்ளை!

மன்னார்

நடுக்கடலில் வைத்து பேசாலையைச் சேர்ந்த 3 இழுவைப் படகிலிருந்து மீன், இறால், ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான டீசல் எண்ணெய் என்பன இந்திய மீனவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக் கொள்ளை சம்பந்தமாக பேசாலை இழுவைப்படகு சங்கத்தினர் கடல் தொழில் அமைச்சிடம் புகார் செய்துள்ளனர்.

## பணயக் கைதிகள்: மீண்டும் இழுபறி!

தெஹ்ரான், டிச. 21

அமெரிக்க பணயக் கைதிகள் விவகாரம், மீண்டும் இழுபறி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஈரானிய அரசு அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தனது; இறுதியானதும்; முக்கியமானதுமான

(8ம் பக்கம் பார்க்க)

### வடமாகாண ஆசிரியர்கள்
# சம்பளப்பாக்கி பெற்றனர்
## ரூ. 70 விசேஷபடியும் கிடைத்தது
### ஆசிரியர்களே சம்பளப் பட்டியல் தயாரித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு கடந்த ஆவணி மாதத்திற்கு முன்பு வழங்கப்பட்ட சம்பள அடிப்படையில் முழுமையான சம்பளமும் ஆம் மாதத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள எழுதுவினைஞர்கள் வேலையிழந்ததினால் கடந்த நான்கு மாதங்களாக இந்த ஆசிரியர்களது சம்பளப்பட்டியல் சரிவரத் தயாரிக்கப்படாது இடைக்காலச் சம்பளம் வழங்கப்பட்டுவந்தது.

இம்மாதச் சம்பளத்துடன் இதுவரை வழங்கப்படாதிருந்த பாக்கிப் பணமும், புதிய 70 ரூபா விசேஷ படியும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளன.

யாழ். கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர்களினது சம்பளப் பத்திரத்தினைத் தயாரிப்பதற்குப் போதிய எழுதுவினைஞர்கள் இல்லாமையினால், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கையின் பேரில் சம்பளப் பத்திரத்தினைத் தயாரிப்பதற்கு 25 ஆசிரியர்கள் எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றினர்கள் (பச்சி-அ

யாழ் நகரில் சகலவிதமானதையும் றைக்கோடிங் செய்வதற் முன்னணி ஸ்தாபனம்.
மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட டேப் றைக்கோடர்கள், றேடியோக்கள், றைஸ் குக்கர் யாவற்றுக்கும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட கழிவு உண்டு.

விநாயகர் றேடிங் கம்பனி
அன்ட் றைகோடிங் சென்ரர்
6A, நவீனசந்தை, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7403
7717

பாட்டா பாதணிகள், நஷனல் சாதனங்கள்,
இறக்குமதி செய்யப்பட்ட பல பொருட்களுக்கும்
கிறிஸ்மஸ் மலிவு விற்பனை
சந்தர்ப்பத்தை தவறவிடாமல் இன்றே விரையுங்கள்
எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 22 சிறீ ஓன்றின் டீசல் லொறி பேர்மிஸ்ஸுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளுமிடம்: T. கந்தசாமி, குப்பிளான், ஏழாலை. 7697

## தேவை

யாழ். வளாகச் சந்தியில் உணவுச்சாலை அமைப்பதற்கு பங்காளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும் 'ம றுசாமி மெடிக்கல் ஹோல், வளாகச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 7711

எமது சங்கத்தின் மூலம் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் மரவேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. திறமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். சு. ஸ்ரீபாஸ்கரன், தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம். 7696

க. பொ. த. உயர்தர வகுப்பிற் கற்பிக்க உயிரியல், கணிதம், பௌதிக, வர்த்தகமானிப் பட்டதாரிகள் தேவை. விண்ணப்பிக்கவும். அதிபர், கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை. 7706

மாலை 1 30 மணிமுதல் மாலை 6 30 மணிவரை பகுதிநேர காசாளராக ஒருவரும் உடைகளைப் பில்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கு ஒருவரும் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 27-12-80க்கு முன்னர் நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்க. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முகாமையாளர், சன்லைட் றைக்கிளீனேர்ஸ், யாழ்ப்பாணம். 7709

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை ரவுனுக்குள் தொலைந்துவிட்டது. எடுத்தவர்கள் கீழேயுள்ள முகவரியில் கொடுக்கவும். வெங்கடேஸ்வரன், நல்லை அம்மன் கோவில், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 7694

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை (பழைய பாடத்திட்டம் ஏப்ரல் 1981 மீட்டல் வகுப்புகள் வினுக்களும் அவற்றிற்குரிய விடைகளும் என்ற முறையில் நடத்தப்படும்.

விண்ணப்பங்கள் 26-12-80 வரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுடன் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும். வகுப்புகள் 31-12-80-ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்

தொலைபேசி எண் 617
3/6, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 7679

---

சி. அமிர்தலிங்கம்,
சட்டத்தரணி,
கோப்பாய்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரசிங்கம் அறபுதநாதன் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

வீரசிங்கம் யோகநாதன், வீமன்காமம், தெல்லிப்பழை.

— மனுதாரர்

மரணசாதன ) இல. 3470
நியாயாதிக்கம் )

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரும், 1981ம் ஆண்டு மாசி மாதம் 13-ம்நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுமுடிவாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1980ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 7700

### மீண்டும் தலைவரானார்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத் தலைவராக சட்டத்தரணி மு. சண்முகநாதன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவான புதிய நெறியாளர் கூட்டத்தில் அவர் மீண்டும் தெரிவானார். உபதலைவராக திரு. பி. எஸ். அல்பிரட் தெரிவு செய்யப்பட்டார் (அ)

### கேள்விப் பத்திரம்

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை

3000 (மூவாயிரம்) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2-50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் 'பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 27-12-80-ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 24-12-80-ந் திகதி பகல் 12-00 மணிவரை சங்கத்தில் விநியோகிக்கப்படும். விண்ணப்பகாரர் ரூ 750/-வைப்புப் பணம் செலுத்தி இருத்தல்வேண்டும்.

பதில் பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை,
19-12-80 7705

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
ஈடு. இல. 1058

வேலுப்பிள்ளை சிவகுருநாதன்
வண்ணார்பண்ணை கிழக்கு, வண்ணார்பண்ணை. வழக்காளி

எதிராக

சிதம்பரநாதச் செட்டியார் சோமசுந்தரம்
411, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/1058-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1981-ம் வருடம் தை மாதம் 26-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 5093/75 இதில் ரூபா 3125/-க்கும் 20-11-78 தொடக்கம் 7-2-80 வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 749/20 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 448/30 நடைபெறவேண்டிய செலவு ரூபா 173/12 1/4 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 127/77 1/2) கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

#### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை காங்கேசன்துறை வீதி, இறைவரி இல 409, 411 ''தத்தன் வளவும் மற்றும் பிரிவுகளும்'' நில. பர. இல. 6 இதற்கெல்லை கிழக்கு வீதி, வடக்கு சிதம்பரநாதச் செட்டியார் சிவகுருநாதனின் ஆதனம், மேற்கு சுப்பிரமணியம் சின்னையாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு வேலுப்பிள்ளை கனகரத்தினத்தின் ஆதனம் இதடங்கலும்.

89, 1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 1-12-80

க. சுப்பிரமணியம்
கொமிஷனர் / விளம்பரப்பாளர். 7691

---

### பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மாவட்ட மன்று மல்லாகம்

ஏழ. இல. எம். எஸ். 526
வேலுப்பிள்ளை சண்முகம்
—சுழிபுரம் வழக்காளி

எதிராக

(1) முருகன் சின்னத்தம்பியும்
(2) பொன்வள்ளியும் சுழிபுரம், எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் M. S. 526 ல் எனக்குக் கிடைத்த கோட்டு கட்டளைப் டிகிரேவிற்கு விரிக்கப்பட்ட ஆதனத்தை 1981-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம் நந்தக்காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

ரூபா 2000/-ம் இன்னும் ரூபா 1500/-க்கு 13-2-75 தொடக்கம் 22 8-75 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 5% வட்டியும் இதில் ரூபா 191/- கொடுபட்டது.

#### ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக்கோயிற்பற்று சுழிபுரம் இறைச் றுத் தொல்லை நா. நில 10, மேற்படி பா. நில. 12ம் பர. நில. 8ம் ஆக பரப்பு 30ம் இதில் வடபுறமாகடர. நில 8 குளி 5ம் பனைகளும் கிழக்கு முருகனுக்கும் பெண் முத்துக்கும் கார்த்திகேசன் ஆசைப்பிள்ளைக்கும் அம்பலவாணர் நடேசனுக்குரிய காணிகள். வடக்கு முருகன் கதிரனுக்கும் பெண் முத்திக்கும்தம்புவுக்குமுரிய காணிகள். மேற்கு முருகேசு சைம்பெண் வள்ளியம்மைக்குரியகாணி தெற்கு புத்தரர் பெரியதம்பிக்கும் புத்தரர் சைம்பெண் மரகதத்துக்குமுரிய காணி. இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

மூ. நல்லலிங்கம்
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்.

19-12-80
7710

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
இல. ஈடு/486

முருகேசு பொன்னம்பலம் கைம்பெண் மனோன்மணி சத்திரந்தை, களபூமி, காரைநகர். வழக்காளி

எதிராக

வல்லிபுரம் பொன்னுச்சாமி
542, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/486-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1981 ம் வருடம் தை மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் இரு துண்டுக் காணிகளை அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய்14,275/-ம், மேலும் ரூபா 100,00/-க்கு 2-6-77 தொடக்கம் 100க்கு 18 வீத வட்டியும் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரையும் கோட்டுச்செலவு ரூபா 754/- இதில் 21-1-79ல் ரூபா 5,000/-ஜயும் வழக்குச்செலவும் செலுத்தப்பட்டிருப்பதாலும் மிகுதிப்பணம் வருமதியாயிருப்பதாலும்.

#### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை பாலிசாந்தன் வளவும் மாதன் வளவும் நில. பர. 1 குளி 4 1/2 கொட்டிலும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு வியாகரரசா பெண் நாகரத்தினத்தின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு கனகரத்தினம் பெண் தங்கம்மாவின் உரிமைக்காரருக்கும் கார்த்திகேசு அருளம்பலத்தின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு ரோட்டு. தெற்கு சின்னப்பு இராசையாவுக்கும் பெண் தங்கரத்தினத்திற்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.

2. இறைபாலி சாந்தன் வளவும் மாதன்வளவும் குளி ... கடைக்கட்டிடமும் இவ்வாதனத்துக்குள் அமையும். கிணற்றுப் பாகமும் 5-8-1935ல் அளவைக்காரன் என். பொன்னம்பலத்தின் அளவுபடத்தின்படி எல்லைகிழக்கு சின்னப்பு இராசையாவுக்கும் பெண் தங்கரத்தினத்துக்கும் கனகரத்தினம் பெண் தங்கம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு கனகரத்தினத்தின் பெண் தங்கம்மா வின் உரிமைக்காரரினுதனம், மேற்கு ரோட்டு, தெற்கு சின்னப்பு இராசையாவுக்கும் பெண் தங்கரத்தினத்துக்குமுரிய ஆதனம்

89, 1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 1-12-80.

க. சுப்பிரமணியம்
கொமிஷனர் & விலை மதிப்பாளர். 7690

---


யாழ்நகரில்

## நத்தார் மலிவு விற்பனை

சகலவிதமான ஒலிப்பதிவு வேலைகளுக்கும் யாழ். நகரில் முன்னணி ஸ்தாபனம்.
V. P. P. கவனிக்கப்படும்.

- நாசனல் பனசோனிக் (National Panasonic) றேடியோக்கள். றேடியோ கசட், தனிக் கசட்டுகள்.
- பிக்ஸ்ரோன் (Bigstone) கசட், கசட் றேடியோக்கள்.
- செனிக் (Senic) றேடியோ.
- எலக்ட் (Elect) றேடியோ.
- சுசுக்கி (Suzuki) றேடியோ.
- ஸ்கைறோ (Skyro) றேடியோ.
- மக்ஸல் (Maxel)-. அக்பா (Agfa) ரீடிகே (TDK), சங்கி (Sanki), கசட் வகைகள்.

நாஷனல் பனசோனிக் தயாரிப்புக்களுக்கு யாழ்ப்பாணப்பகுதி விநியோகஸ்தர்கள் :

## றேடியோஸ் பரி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிலுள்ள சோவியத்வங்கி தேசிய மயமாக்கப்பட்டது!

தெஹ்ரான் டிச. 21 ஈரானில் இயங்கிவந்த சோவியத் யூனியனின் வங்கி ஒன்றை ஈரானிய அரசு தேசிய மயமாக்கியுள்ளது.

நாட்டிலுள்ள சகல வங்கிகளையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் இவ்வங்கி தேசியமயமாக்கப்பட்டது.

இச்சட்டத்தின் கீழ் நாட்டிலிருந்த சகல வெளிநாட்டு வங்கிகளும் முன்னரே தேசிய மயமாக்கப்பட்டபோதிலும் இவ்வங்கி மட்டுமே இதுவரை சுவீகரிக்கப்படாமலிருந்து வந்தது.

தற்போது இந்த வங்கி ஈரானிய அரசுக்கு முழுமையாக சொந்தமாக்கப்பட்டுள்ளது. (கு)

## அரச எம். பி.க்களுக்கு கட்டாய அழைப்பு

(கொழும்பு)

ஜனவரி மாதம் 6-ம் திகதி நடைபெற இருக்கும் அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட இருப்பதால் சகல அரசாங்க எம். பி.க்களையும் கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்க வேண்டும் என்று அரசாங்க கட்சி பிரதம கொறடா திரு. வின்சட் பெரேரா கேட்டுள்ளார்.

மாவட்ட சபைத் தேர்தல் உட்பட பலமுக்கிய விடயங்கள் அன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிகிறது. (இ)

## பாகிஸ்தானுடன் நல்லுறவு; பாரத அரசு தயார்!
### பிரதமர் இந்திரா அறிவிப்பு

புதுடில்லி டிச. 21 பாகிஸ்தானுடன் பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கான எந்த நடவடிக்கையையும் பாரத அரசும் மக்களும் ஆதரிப்பார்கள் என்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரதத்தைப் பொறுத்தமட்டில் பாகிஸ்தானுடன் நட்புக் கொள்ளவே இடையறாது உழைத்து வருகிறது என்று தெரிவித்த பிரதமர்; காஷ்மீர் பிரச்னை பற்றி தெரிவிக்கையில் "எல்லா' சாவதேச அரங்குகளிலும் பாகிஸ்தான் தலைவர்கள் காஷ்மீர் பற்றிக் கூறுவது சிம்லா உடன்படிக்கையை சொல்லிலும் செயலிலும் மீறுவதாகும்'' என்றார். (கு)

## அண்ணாமலைப் பல்கலைக்கழக புதிய உபவேந்தர்

சென்னை டிச. 21 அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் சிட்டி பாபு நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் உபவேந்தராக இருந்த திரு பி. எஸ். சோமசுந்தரம் சுகயீனம் காரணமாக கடந்த வாரம் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். (கு)

## பா. அ. சங்க நிர்வாகிகள்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி கணேசவித்தியாசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில பாடசாலை அதிபர் திரு. வே. தம்பையா தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்தியில் அரசாங்கத்தோடு ஆசிரியர், பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் தீவிர பங்கெடுத்து செயல்பட்டால பாடசாலை பலதுறைகளிலும் முன்றேற்றமடையும். இதனை உணர்ந்து எமது பெற்றோரும் பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் என்னோடும் எனது சக ஆசிரியர்களோடும் ஒத்துழைத்து பாடசாலைக்கு ஆற்றிவரும் சேவைகளையிட்டு பெருமிதம் அடைகின்றேன் என்று அதிபர் தமதுரையில் குறிப்பிட்டார்.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே, தம்பையா, உபதலைவர் எம். எஸ் கந்தையா, எஸ் நடேசு, செயலாளர் எஸ். கந்தசாமி, உபசெயலாளர்: எஸ். சபாரத்தினசர்மா, பொருளாளர்: திருமதி பா. செல்லையா.

இவர்களுடன் ஒன்பது நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (கு)

## காஸ்ட்ரோ மீண்டும் தலைவர்

ஹவானா டிச. 21 கியூபா ஜனதிபதி டாக்டர் பிடல காஸ்ட்ரோ, கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தொடர்ந்து 5 வருடங்களுக்கு தலைவராகப் பதவிவகிப்பார். (கு)

## தொழிற்சாலையில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்திலுள்ள தனியார் தொழிற்சாலையில் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாகச் சுன்னாகம் பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சப் இன்ஸ்பெக்டர் எஸ். எம். ஜெயத்திலக்க தலைமையிலான பொலிஸ் கோஷ்டி உடனடியாக சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து பொதுமக்களின் உதவியுடன் பலத்த சிரமத்துடன் தீயணைக்கும்முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டனர்.

மேற்படி தொழிற்சாலை ஸ்டோரில் உள்ள ஒரு இயந்திரத்தின் தவறுதலான பாவிப்பு முறையால் இத் தீவிபத்து ஏற்பட்டது என்றும் தமது தீயணைக்கும் முயற்சிகள் தமதித்து இருந்திருந்தால் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கும் என்று சுன்னாகம் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ச-கு)

# தென் லெபனானில் திடீர் தாக்குதல்!

நியூயோர்க் டிச. 21 தென் லெபனான் சில பகுதிகளில் திடீரென ராக்கட் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஐ. நா. அமைதி காக்கும் படையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இந்தப் பிரதேசத்தில் இவ்வாறு தாக்குதல்கள் நடந்திருப்பதை உலக நாடுகள் பல கண்டித்துள்ளன.

சண்டையில் ஈடுபட்டுள்ள அனைவரும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து அந்தப் பகுதியில் பதட்டம் அதிகரிப்பதை தடுக்குமாறு ஐ. நா. பொ. செயலாளர் டாக்டர் வால்ஹெய்ம் கேட்டுள்ளார். (கு)

## கோழித்திருட்டு: ஒத்திவைக்கப்பட்ட கடுழியச்சிறை

(பண்டத்தரிப்பு)

கோழித் திருட்டு தொடர்பாக சங்கானைப் பொலிசாரினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சில்லாலை வாசியான தொம்மைப்பிள்ளை மரியதாஸ் என்பவரைமீண்டும் சங்கானை ஆரம்ப நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி ஒன்றரை வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருமாத கடுழியச் சிறைத் தண்டனை வழங்கினார். இவர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிபதி திரு. கணபதிப்பிள்ளை மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார். எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். தேவராசா ஆஜரானார்.

### யாழ். நவீனசந்தை திருட்டு

# கிளிநொச்சியில் ஒருவர்; முறிகண்டியில்இருவர்கைது

## பொருட்களில் ஒரு பகுதி யாழ். நகரிலும் ஹொரவப் பொத்தானையிலும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தை மேல்மாடிக் கட்டிடத்தில் நடைபெற்ற திருட்டுக்கள் துப்புத்துலக்கப்பட்டு சில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் துப்பறியும் பகுதி பொலிஸ் கான்ஸ்டபிள் திரு எஸ். ஜோர்ஜுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே மேற்படி திருட்டுக்கள் துப்புத் துலக்கப்பட்டன.

கடந்த ஏப்ரல் மாதம் 23 ம் திகதி யாழ். நவீன சந்தை மேல்மாடியிலுள்ள கவிதாஸ் புடவைக் கடை உடைக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சாறிகள், பிளவுஸ்கள், சேட்வகைகள், பெனியன்கள், காற்சட்டைத் துணிகள் போன்ற பல பொருட்கள் திருடப்பட்டன என்றும் கடந்த ஜூன் மாதம் மேற்படி மேல்மாடியிலுள்ள சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடை உடைக்கப்பட்டு 23 ஆயிரத்து 350 ரூபா பெறுமதியான துணிவகைகள் திருடப்பட்டன என்றும் யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருந்தன.

மேற்படி புகார்கள் சம்பந்தமாக உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் விக்கிரமசிங்கா, கான்ஸ்டபிள்கள் எஸ். ஜோஜ், சோமரத்தின ஆகியோர் கிளிநொச்சி, முருகண்டி ஆகிய இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி, கண்டி வீதி, 53 ம் கட்டையடியில் மேற்படி பொலிசார் சென்றுகொண்டிருப்பதைக் கண்ட ஒருவர் ஓடினாராம். அவர்மீது சந்தேகம் கொண்ட பொலிசார் அவரைத் துரத்திச் சென்று கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது சந்தேக நபர் மலையகத்தைச் சேர்ந்தவரென்றும் பெரியசாமி ராமு அல்லது சின்னையன் (19 வயது) என்றும் கவிதாஸ் புடவைக் கடைத் திருட்டில் சம்பந்தப்பட்டவரென்றும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபருடன் முருகண்டிக்குச் சென்ற பொலிசார் முருகண்டிப் பிள்ளையார் கோவில் மடத்தில் நித்திரையாக இருந்த மற்றும் இருவரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது இருவரும் மலையகத்தைச் சேர்ந்தவர்களென்றும், வேலு இரசேந்திரம் (18 வயது) என்பவர் கவிதாஸ் திருட்டில் சம்பந்தப்பட்டவரென்றும், மற்றவர் நல்லையா பொன்ராசா (16 வயது) என்றும் அவர் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ். நவீன சந்தைக் கடைத் திருட்டில் ஈடுபட்டவரென்றும் தெரியவந்துள்ளது.

கவிதாஸ் புடவைக் கடையில் திருடப்பட்ட 4 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிமணிகள் ஹொரவப்பொத்தானையிலும், யாழ்ப்பாணத்திலும் கைப்பற்றப்பட்டன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் திருடப்பட்ட துணிமணிகளில் சிலவற்றை யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் வைத்துப் பொலிசார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு ஜனவரி மாதம் 5 ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு திருட்டுக்கள் சம்பந்தமாக மேலும் சிலர் பொலிசாரால் தேடப்படுகின்றனர். (கை-இ)

நெல்லைப் பாதிக்கும் கிருமிகளைக் கொன்று விளைச்சலைப் பெருக்குங்கள்



பாவியுங்கள்.

BASF பொபக்தியன (450 மி லீ.) ரூ 39 50

மக்லூடஸ காபோபியூறன் (2 கி. கிராம்) ரூ. 33.00

மக்ஃபொஸ (450 மி.லீ.) ரூ. 80.00

பரத்தயன் (450 மி லீ.) ரூ. 40.00

பிலாடறின் (450 மி லீ.) ரூ. 80.00

METROPOLITAN

மக்வூட்ஸ் லிமிட்டெட்
297, யூனியன் பிளேஸ் கொழும்பு 2
தொலைபேசி: 32941-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இந்த உலகம் நமது கர்மக்ஷேத்திரம். சில கடமைகளை ஆற்றுவதற்காக நாம் இங்கு பிறந்திருக்கின்றோம். மக்கள் பலருடைய வீடுகள் நாட்டுப் புறப்பகுதியில் தான் உள்ளன. உத்தியோக வேலையைச் செய்வதற்காகக் கல்கத்தா நகரப்புறத்திற்கு வந்து செல்கின்றனர்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# ஆத்மஞானம் பற்றிய அறிவு உலக அமைதிக்கு அவசியம்!

## இலங்கைவந்துள்ள குருமகராஜ்ஜியின்சீடர் மலேசியா சுப்பிரமணியம் பேட்டி

'தெள்ளத் தெளிந்தவர்க்குச் சீவன் சிவலிங்கம்' சிவன் என்பது மெய்ஞ்ஞான ஒளியாகும். உலகில் மெய்ஞ்ஞானமே உன்னதமானது. மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு முதலில் தன்னைத்தானே அறிய வேண்டும். மெய்ஞ்ஞானம் ஒவ்வொருவருள்ளேயும் அடங்கியுள்ளது. இதனை அறிவதற்கு நாம் ஒரு மெய்ஞ்ஞான குருவிடம் நமது பணிகளையும் மனதையும் அர்ப்பணிக்க வேண்டும்,"

இவ்வாறு குருமகராஜ்ஜியின் சீடர்களில் ஒருவரான மலேசியாவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் உரும்பராயில் குருமகராஜ்ஜியின் பணிக்காக உருவாக்கப்பட்டுள்ள தெய்வீக ஒளிச்சங்கத்தில் வைத்துக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

திரு. சுப்பிரமணியம் மேலும் குருமகராஜ்ஜியைப் பற்றிக் கூறியதாவது;

— கு. சடகோபன் —

"தற்போது அமெரிக்காவில் மியாமி நகரத்தில் உள்ள குருமகராஜ்ஜி பக்தர்கள் சங்கத்தில் மெய்ஞ்ஞானம் பற்றிய விளக்கங்களை பக்தர்களுக்கு ஆற்றிவருகின்றார், எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு அவர் வருகை தருவதற்குள்ளார். உலகின் பல நாடுகளுக்கும் சென்று ஆத்மா பற்றிய விளக்கங்களை குருமகராஜ்ஜி நிகழ்த்தியுள்ளார்.

"குருமகராஜ்ஜியின் பக்தர்கள் பெருமளவில் உலகின் பல்வேறு பாகங்களிலும் காணப்படுகின்றனர். குருமகராஜ்ஜி வடஇந்தியாவில் ஹட்வார் என்ற இடத்தில் 1957-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அவதரித்தார். தனது பள்ளிப் பராயத்தில் ஹட்வாரில் உள்ள செண் யோசப் அக்கடமியில் கல்விபயின்றார். கல்விப்பராயத்திலேயே தனது தந்தையாரான குருஹன்ஸ் மகராஜ்ஜி என்பவரையே குருவாகக் கொண்டு 6 வயதில் ஆத்மா மெய்ஞ்ஞான அறிவு ஆகியன பற்றிய மெய்ஞ்ஞான நெறியில் ஈடுபட்டார்.

"இவ்வாறு ஈடுபட்டு இரண்டரை வருடங்களானதும் இவரது குருவான தந்தையார் இவருக்கு எட்டரை வயதாக இருக்கும் போதே இவ்வுலக வாழ்வை நீத்தார். தனது தந்தையாரின் உபதேசப்படி இவர் தொடர்ந்தும் மெய்ஞ்ஞானத்தில் ஈடுபட்டார். தனது 12-வது வயதில் பள்ளிப்படிப்பை இடை நிறுத்தினார். பின் உலகின் பல பாகங்களிலும் சென்று உபதேசங்கள் செய்து இன்று அநேகமான பக்தர்களைக் கொண்டவராக விளங்குகின்றார்.

"உலகம் முழுவதிலும் குழப்பங்களும் பூசல்களும் தலைதூக்கி மனிதர்கள் அமைதியின்றி என்றுமே சலனமடைந்தும் கலக்கமடைந்தும் அவதிப்படுகின்ற இக்காலத்திலே ஆத்மஞானம் பற்றிய அறிவு மிக அத்தியாவசியமானதாகும். அதுவே அமைதிக்கு வழியாகும். எவன் ஆத்ம ஞானத்தை அடைகின்றானோ அவன் தான் பூரண மனிதன் ஆக முடியும். [illegible] அடைய முடியும். உலகில் எதுவும் ஒரு காரணமில்லாமல் நடப்பதில்லை. மனிதன் தோன்றியதற்கும் காரணம் உண்டு. அதுதான் ஆத்ம ஞானம் பெறுவதாகும். இதற்காக எங்குமே அலைய வேண்டியதில்லை. நமக்குள்ளேயே நாம் காண்போம்.

இந்த அடிப்படையிலேயே குருமகராஜ்ஜியின் நெறி முறை உடையது

என்று கூறிய சீடர் திரு. சுப்பிரமணியம் மேலும் பல தத்துவ விளக்கங்களையும் விளக்கினார்.

குருமகராஜ்ஜியின் நெறி முறை எந்தவொரு தனிப்பட்ட மதசாரமும் அற்றது என்றும் குறிப்பிட்ட அவர் சகல மதங்களிலிருந்தும் சிறந்த தத்துவங்களையும் தத்துவரீதியாக விளக்கினார்.

இன்றைய விஞ்ஞான உலகம் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் ஆத்மாவையும் தூய்மைப்படுத்தி வளர்ப்பதில் ஈடுபடல்தான் நிரந்தரமான முன்னேற்றமாக இருக்கும் என்றும் கூறிய அவர் தான் கூறும் கருத்துக்கள் யாவும் தனது குருவான குருமகராஜ்ஜியின் நெறிமுறைகள் கருத்துக்களைத் தழுவியன என்றும் குறிப்பிட்டார்.

சீடர் திரு. சுப்பிரமணியம் இப்போது உரும்பிராய், ஆஸ்பத்திரி வீதி தெய்வீக ஒளிச் சங்கத்தில் தங்கியுள்ளார். இலங்கையில் பல பகுதிகளுக்கும் சென்று தமது நெறியைப் போதித்து வருகின்றார். [ச-கு]

## நமது நோக்கு

### 'எங்கு எழிலென் ஞாயிறு'

'உலகின் மிகப்பெரிய அபாயமான தொழில் பத்திரிகைத் தொழில்' என்று சர்வதேச பத்திரிகை நிறுவனம் அதன் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. சுமார் 65 நாடுகளின் 2000 பிரட்ட பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் கொண்ட நிறுவன இவ்வாறு குறிப்பிடுவதற்குப் போதிய காரணம் உண்டு.

பத்திரிகையாளர்கள் பல நாடுகளில், கொலை, சித்திரவதை, சிறை, நாடுகடத்தல் முதலிய பாரிய தண்டனைகளுக்கு இலக்காகினர். சில நாடுகளில் நிலைமை திருந்திய போதும், சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும் நாடுகளில் பத்திரிகையாளர் நாய்படாப்பாடு படுகின்றனர்.

தென்கொரியா, துருக்கி, ஸ்பெயின், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பத்திரிகையாளர் எவ்வித பாதுகாப்புமின்றிக் கடமைபுரிகின்றனர்.

எந்தத் தொழிலிலும் அபாயம் உண்டு. ஆயினும் வாளினும் பார்க்கப் [illegible] மான ஆயுதம் பேனா என்ற ஆங்கில வாசகத்தில் உண்மை உண்டென்பது நாம் இன்றும் காணும் அனுபவம்.

எங்கள் நாட்டுப் பத்திரிகைகள் கட்டுப்பாட்டில் இயங்குவதை நாம் சண்டிக்க விரும்பவில்லை எந்நேரமும் எந்தப் பத்திரிகாசிரியரும் நீதிமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அபராதமோ, சிறையோ விதிக்கப்படும் அபாயம் இங்கு இல்லாமலில்லை.

ஜனநாயகர் என்றால் பேனாவை நஞ்சில் நனைத்து எழுதுவதல்ல என்பதைப் பத்திரிகையாளர் உணரும் பொறுப்புடையவர்கள்; அதுவும் ஒரு வளர்ச்சியடையும் நாட்டு அபிவிருத்தி வளர்ச்சித் திட்டங்களுக்குப் பங்கம் விளைக்கும் செய்திகளை, கருத்துக்களை ஆதாரமற்ற போக்கில் புனைந்துவிடுவது ஆட்சியைக் கவிழ்க்கும் திட்டத்திற்கு துணைபோகும் செயலாகும்.

இன்று வளர்முகநாடுகளில் பத்திரிகையாளர் பிரச்சனை இந்த அடிப்படையில் அபாயமானதாகும்.

நாம் இங்கு விளக்கமுயல்வது இவ்வித அபாயத்தை அல்ல.

பத்திரிகைச் சுதந்திரம் பத்திரிகையாளர்களின் பரந்த அறிவு, சிறந்த ஆற்றல், நாட்டுப் [illegible] பொறுப்பு உணர்ச்சி எல்லாம் ஒருங்கே சேர்ந்த பண்பிலே தங்கியுள்ளது.

இவ்வித சுதந்திரம் இன்றேல், பத்திரிகைகள் பட்டாசு போன்று சத்தமிடும் [illegible] வெறுங் கூடாரமோ, அல்லது ஆட்சிக்குத் துதிபாடும் ஊமைக்குரலாகவோ அமையும்.

சுதந்திர பத்திரிகையாளர்கள் தண்டனைக்கு அஞ்சி, உள்ளதை உள்ளவாறு எழுதவும், தெய்வீகமனச்சாட்சியின் தெளிந்த கருத்தை வெளியிடவும் தயங்கமாட்டார்.

ஒரு சிறந்த ஆசிரியரின் சிறப்பிலக்கணம் அஞ்சாமை. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்றார் நக்கீரர். அந்தப் பட்டியலில் இன்னும் பலர் உண்டு. கிரேக்க ஞானி சோக்கிறதர் உண்மையைத் தேடிச்சென்று நஞ்சருந்தி உயிரிழந்தார். இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். ஜனநாயகக் கோட்பாட்டிற்கு இலக்கணங்கண்ட அமெரிக்காவின் ஆபிரகாம் லிங்கன் துப்பாக்கியால் சுடப்பட்டார். அந்த கதிதான் மகாத்மா காந்திக்கும்.

இந்த உலகம் போற்றும் ஆசிரியர்கள், இறந்தபின் உலகத்தார் [illegible] உயிர்வாழுகின்றனர். இவர்களைக் கொன்றவர்கள் இறந்தபின்னும் இகழ்ச்சிக்குரியவர்களே

பத்திரிகைச் சுதந்திரத்தின் அத்திவாரம், கட்டுப்பாடும் சண்டித்தனமான போக்கும் என்பதை நாம் வற்புறுத்துகின்றோம். அந்த அத்திவாரத்தைத் தகர்க்கவோ அல்லது அதன்மேல் எழுப்பப்பட்ட கட்டிடத்தை அரசியல் அதிகாரத்திற்கும் பயமுறுத்தலுக்கும் இரையாக்கவோ எத்தனிக்கும் ஆட்சி அதன் ஆயுத்தை விலைகொடுத்து வாங்குவதாகக் கருதவேண்டும்.

கடந்தகால சரித்திரத்தில், எங்கள் நாட்டில் மட்டுமல்ல, மற்றும் பல மக்கள் ஆட்சி நிலவும் நாடுகளிலும் அரசாங்கங்கள் வீழ்ச்சி பெற்றதன் காரணம் 'சபாஷ்' சொல்லும் பத்திரிகைகளாலன்றி, ஆக்கபூர்வமான கண்டனங்கள் [illegible] பத்திரிகைகளால் அல்ல.

சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கத் திடசங்கற்பம் செய்துகொண்ட ஆட்சியாளர் தாம் விதிக்கும் கட்டுப்பாடுகளும் விடுக்கும் எச்சரிக்கைகளும் இந்த நீதிக்குக் கட்டுப்படுமாயின் எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சிகள் எவற்றைக் குறித்தும் அஞ்சவேண்டியதில்லை.

வீட்டிலே, நாட்டிலே, அகில உலகிலுமே, வறுமை, நோய், பகைமை போன்ற தீமைகள் அதிகரித்து வருகின்றன எந்த இடர்கள் எவரை எங்கு எந்நேரத்தில் தாக்கினாலும் எல்லாவற்றையும் [illegible] அழிக்கும் இறைவனுக்கே, நாம் செய்யும் பணி உரியதென்ற கருத்து உதயமானால் 'எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு?'

## மக்கள் கருத்து

### இந்த ஒழுங்கையும் வாய்க்காலும்

ஆவரங்கால் சந்தைக்கு அண்மையில் அமைந்திருக்கும் ஒழுங்கையும் தனைத்தொடர்ந்திருக்கும் வெள்ளவாய்க்காலும் நீண்ட காலமாகப் பழுதடைந்தும் கவனிப்பாரற்றும் இருந்துவருகிறது.

இடையிடையே பள்ளங்களும், கற்களும் தலை நீட்டியிருக்கும் இவ்வொழுங்கை வழியாகத்தான் அதிகமான போதுமக்கள் நடமாட்டம் இருப்பதும் தவிர்க்கமுடியாத நாளும். இந்த ஒழுங்கை இவ்வளவு தூரம் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது இதனைத் தொடர்ந்துள்ள வெள்ள வாய்க்கால் சேதமாக இருப்பதாகும்.

வெள்ளவாய்க்கால் வழியாக மழை வெள்ளம் சீராகப் போக வேண்டிய இடத்திற்குப் போக முடியாது தேங்கி, அத்தேக்கம் வரவர அதிகரித்து இவ்வொழுங்கையிலேயே நிலம் தெரியாத அளவிற்கு தேங்குகிறது ஒழுங்கையிற் தேங்கிய வெள்ளம் ஊர்மக்களின் காணிகளிலும் தேங்குகிறது.

இவ்வாறு நீர் தேங்குவதால் நடமாட்டத்திற்கும் இடையூறாக இருப்பதுமட்டுமன்றி, அழுக்கான நீரினால் பரவும் நோய்களுக்கும் இடமளிக்கும் சாத்தியக்கூறுகள் தோன்றுகின்றன.

எனவே இது சம்பந்தமாக பொறுப்புள்ளவர்கள் தயவுசெய்து மேற் கூறப்பட்ட வெள்ளவாய்க்காலையும் ஒழுங்கையையும் சீர்திருத்தி பொது மக்களின் இடர் களைய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[illegible] எஸ். ஐ.

ஆவரங்கால்

## திருட்டுவழக்கில் எதிரிக்கு ஒருவருடச் சிறை!

(யாழ்ப்பாணம்)

ஆயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியான மோட்டார்ச் சைக்கிள் உதிரிப் பாகங்களைத் திருடி விற்ற நபர் ஒருவருக்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

நியூ சன்யோ கடைச் சொந்தக்காரரான ம. சந்திரகுமாரின் ஆயிரத்தைந்நூறு ரூபா பெறுமதியான மோட்டார்ச் சைக்கிள் உதிரிப்பாகங்களைத் திருடியதாகச் சந்தேகத்தின் பேரில் சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்டு வந்த தம்பிராசா மகேந்திரனை சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த திரு. சருணரதன, திரு சிவயோகம் ஆகியோர் கைது செய்தனர். சந்தேக நபரான தம்பிராசா மகேந்திரன் மல்லாகம் நீதிமன்றத்தில் சுன்னாகம் பொலிசாரினால் ஆஜர் செய்யப்பட்டு அங்கு ஒரு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். (ச-கு)

## கிறிஸ்மஸ் புத்தாண்டு ஆராதனைகள்

(அரியாலை)

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய நத்தார் புதுவருட ஆராதனை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

24ம் திகதி மாலை 6 மணிக்கு [illegible] பட்டாராதனையும், 25ந் திகதி காலை 7 மணிக்கு கிறிஸ்மஸ் உற்சவ ஆராதனையும் 27ம் திகதி மாலை ஐந்தரை மணைக்கு சபைப் பிள்ளைகளினதும் வாலிபர்களினதும் கிறிஸ்மஸ் கலை நிகழ்ச்சிகளும் 28 திகதி மாலை 4 மணிக்கு கிறிஸ்மஸ் ஐக்கிய தேநீர் விருந்தும், வேதபாட வகுப்பு பிள்ளைகளின் பரிசளிப்பு விழவும் 31ந் திகதி இரவு பதினொரு மணிக்கு விழிப்பு ஆராதனையும், பரிசுத்த நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

[illegible] 1ந் திகதி காலை 7மணிக்கு கிறிஸ்து விருத்தசேதன திருநாள் உற்சவ ஆராதனையும், பரிசுத்த நற்கருணை ஆராதனையும், மாலை 6 மணிக்கு வாலிபரின் வருடாந்த இரவு விருந்தும் நடைபெறும்.

இவ்வாராதனைகளை ஆலய குருவானவரும், யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனுமாகிய அருட்திரு சாம், டீ. ஹேறா சிங்டன் அடிகளார் நடத்துவார் இவருக்கு [illegible] கலாநிதி ஜேசு ஜெயசிங்கம் பணியாற்றுவார் (அ)

## மகரிஷியின் நூற்றாண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் நூற்றாண்டு பூர்த்திவிழா நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண வைத்திய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

காலை 6 மணி தொடக்கம் இரவு 8மணிவரை பூசை, தியானம், அகண்ட நாம பஜனை, பிரார்த்தனை, சதசம்டாஷனை, சொற்பொழிவு நடைபெறும்.

மாலை 6 மணிக்கு அருள்மொழிஅரசு வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் 'ரமண மகரிஷி அவர்களின் மகிமை' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (கோ-கு)

### பட்டிருப்பில் இராசமாணிக்கத்திற்கு முழு உருவச்சிலை

(மட்டக்களப்பு)

தமிழரசுக்கட்சித் தலைவர்களுள் ஒருவரும் பட்டிருப்புத் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான காலஞ்சென்ற திரு. சி. மு. இராசமாணிக்கத்தின் ஞாபகார்த்தமாக முழு உருவச்சிலை ஒன்று பட்டிருப்புத்தொகுதி களுவாஞ்சிக்குடிச் சந்தியில் நிறுவப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன் சிமெந்து

# தொழிற்சாலை சிலிண்டர் யாழ்.தேநீர்க்கடையில்மீட்பு

## நால்வர் கைது!!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் திருடப்பட்டதாகக் கூறப்படும் சிலிண்டர் ஒன்றை யாழ் பொலிசார் யாழ் தட்டாதெருச் சந்தியில் உள்ள தேநீர்க்கடை ஒன்றிலிருந்துமீட்டனர். இது தொடர்பாக சிமெந்து தொழிற்சாலையில் வேலை செய்யும் மூன்று பேரையும் மற்றும் ஒருவரையும் பொலிசார் கைது செய்தனர்.

குறிப்பிட்ட சிலிண்டரை விற்பதற்காக விலை பேசிக் கொண்டிருந்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனராம்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது;- காங்கேசன் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களான உடுவில் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் யோகராசா (20 வயது) விழிசிட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி விவேகானந்தன் (33 வயது) யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இராசரத்தினம் புவனரத்தினம் (24வயது) ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு மறுநாள் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் தொழிற்சாலையிலிருந்து பெறுமதிமிக்க 2இரும்பு சிலிண்டர்களை வான் ஒன்றில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குவந்து தட்டாதெருச் சந்தியில் இறங்கினராம். சிலிண்டரை அவ்விடத்திலுள்ள தேநீர்க் கடையில் வைத்துவிட்டு யாழ் சோனகதெருவைச் சேர்ந்த அப்துல்ரகுமான் (24வயது) என்பவருக்கு சிலிண்டரை விலை பேசினராம்.

இரகசியத் தகவல் ஒன்றின் மூலம் இச் செய்தியை அறிந்த யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் திரு. எஸ் திருச்சிற்றம்பலம் பொலிஸ் கோஷ்டி ஒன்றுடன் தட்டாதெருச் சந்தியையடைந்து சந்தேகநபர்களைக் கைது செய்தது

இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம், சார்ஜன்ட்கள் ஜேசுதாசன், நவரத்தினம், கான்ஸ்டபிள்கள் ஏ வி. தேவசகாயம் தனபாலசிங்கம், நவரத்தினம், இராசரத்தினம் ஆகியோர் சந்தேகநபர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்திய போது:

மாணிக்கம் யோகராசா என்பவர் கடந்த சில தினங்களுக்கு முன் சோனகதெருவிற்கு வந்து பழைய இரும்புப் பொருட்கள் தந்தால் விலைக்குவாங்குவீரா என்று தம்மிடம் கேட்டதாகவும் தாம் சம்மதம் தெரிவித்ததாகவும் அதிகாலையில் தட்டாதெருச்சந்தியில் தன்னைச் சந்திக்கலாமென அவரிடம் தான் கூறியதாகவும் அதன்படி நேற்று சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் சந்தேகநபர்கள் மூன்று பேரும் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து வேலை முடிந்து வான் ஒன்றில் ஏறித் தட்டாதெருச் சந்தியில் வந்து இறங்கியதாகவும் அவர்கள் வரும்போது 2 சிலிண்டர்களைக் கொண்டுவந்து தேநீர்க்கடையில வைத்து விட்டு தம்மைச் சந்தித்து சிலிண்டரை விலைக்கு வாங்கும்படி கூறியதாகவும் விலை பேசிக் கொண்டிருந்தபோதே பொலிசார் தம்மையும் ஏனையோரையும் கைது செய்ததாகவும் அப்துல் ரகுமான் அசீஸ் என்பவர் பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிசாரால் சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

(கொ-கு)

### சிலை எங்கே?

(திருகோணமலை)

திருகோணமலையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தலைவருமான அமரர் ந. இ. இராஜவரோதயம் அவர்களுக்கு சிலை நிறுவ என திருகோணமலை மககளிடம் இருந்து நிதிசேகரிக்கப்பட்டது ஆனல் இதுவரை சிலை நிறுவினபாடும் இல்லை நிதிக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை.

இது சம்பந்தமாக 1969ம் ஆண்டு சரஸ்வதி தியேட்டர் ஆரம்பநாள் விழாப்பணமும் ஒதுக்கப்பட்டது. 10 வருடங்கள் சென்றும் ஏன் சிலை நிறுவவில்லை என சம்பந்தப்பட்டவர்களை மக்கள் வினவுகின்றனர்கள்.

திருட்டு வழக்கில்

# முன்னாள் கான்ஸ்டபிளுக்கு 4 வருட கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

திருட்டு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவருக்கு 4 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

கட்டுவன் பிள்ளையார் கோவிலடியைச்சேர்ந்த பொன்னுச்சாமி துரைசாமி (45 வயது) என்பவருக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது. சந்தேகநபர் ஏற்கனவேபொலிசாகக் கடமையாற்றி வேலை நீக்கம் செய்யப்பட்டவர் என்றும் அவர் ஏற்கனவே 16 சைக்கிள்களைத் திருடியதற்காகவும், வீடொன்றை உடைத்துத் திருடியதற்காகவும் மொத்தம் 17 குற்றங்களுக்காக ஏற்கனவே சிறைசென்றுள்ளார் எனவும் பொலிசார் நீதவானிடம் எடுத்துச்சாட்டினர். இதையடுத்தே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு ரி ஜேகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

சந்தேகநபர் கோப்பாய் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு அவரால் திருடப்பட்டதாகக் கூறப்படும் 3 சைக்கிள்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

சந்தேகநபரால் திருடப்பட்ட சைக்கிள்களில் ஒன்று கோப்பாய் பொலிஸ் பகுதியிலுள்ள கோண்டாவிலிலும் ஏனைய 2 சைக்கிள்களும் யாழ்ப்பாணம் பிப்பங்குளம், நீராவியடி ஆகிய இடங்களிலும் திருடப்பட்டவை எனபதும் பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரியவந்ததாம். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ் பொலிஸ் சார்ஜன்ட் திரு எஸ் குணரத்தினம், கான்ஸ்டபிள் திரு ஏ. வி தேவசகாயம் ஆகியோர் புலன்விசாரணை மேற்கொண்டதுடன் சந்தேக நபருக்கு எதிராக 2 சைக்கிள்களைத் திருடியதாக இம் மாதம் 4 ம் திகதி வழக்குத்தாக்கல் செய்தனர். அன்று சந்தேகநபர்குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து கைவிரல் அடையாளம் எடுக்கப்பட்டு 19 ம் திகதி வரை சந்தேகநபரை றிமாண்டில் வைக்கும்படியும் அன்றைய தினம் 19 ம் திகதி தீர்ப்பு வழங்குவதாகவும் நீதவான் தெரிவித்திருந்தார்.

மீண்டும்19 ம் திகதி சந்தேகநபர் மீண்டும் நீதிமன்றில்

(8-ம் பக்கம் பார்க்க)


நத்தார் - புத்தாண்டு வைபவங்களையொட்டி, யாழ்ப்பாண மக்களுக்கு இலாபகரமாக, பலபொருட்களை வழங்குவதற்காக விசேடமாக வரவழைக்கப்பட்டுள்ளன

உங்கள் ஓடர்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்!

யப்பான் நாட்டிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்டு, வடபகுதி விவசாய நண்பர்களின் உற்ற தோழனாகத் திகழ்வது "இசுக்கி" உழவுயந்திரம்!!

எமது காட்சிச்சாலையில் பார்வையிட்டு கொள்முதல் செய்யலாம்! இலாபகரமானது!!

குறைந்த எரிபொருள்; அதிக சக்திகொண்டது;
இலகுவான இளச் அமைப்பு;
சரிப்படுத்தும் கைப்பிடி; சுழலும் மண்வெட்டி;
டீசல் என்ஜின்; அதிகபாரம் ஏற்றலாம்
தகுதிகாண் பொருட்களை நாடுவோர்
"இசுக்கி"யையே விரும்புவர்!

இவை மட்டுமா?
எதுவேண்டுமோ அத்தனையும் கிடைக்கிறதுஎம்மிடம்!!

விவசாயிகளின் தேவைகளுக்கு:-
நீரிறைக்கும் யந்திரம், இரண்டுசில்லு உழவு இயந்திரம், தெளிகருவிகள், உப உறுப்புக்கள், அல்கத்தீன் குழாய்கள், கிருமி நாசினிகள், விவசாய உபகரணங்கள், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பயிர்ச் செய்கைகளுக்கான உரக்கலவைகள்.

உப உணவுப் பொருட்கள்:-
பூடு, மிளகு, நெஸ்டம், ஓவல்ரின், வெஸ்பாக் டின் மீன்.

மக்ஸ்பிறே பாலுணவு,
கிறிஸ்மஸ் புதுவருட அலங்காரங்கள்,
தைவானிலிருந்து வரவழைக்கப்பட்ட மேசை,
தரை மினவிசிறிகள், கூரை விசிறிகள்
பெருமளவில் தருவிக்கப்பட்டுள்ளன.

"இசுக்கி" உழவுயந்திரம்



ISEKI Power Tiller

பாவனைப் பொருட்கள்: கோல்மன் பெற்றோமாக்ஸ்,
கால்நடைகளுக்கு: உணவுத்தீன் வகைகள், சகல மருந்துவகைகள்

ப. நோ. கூ. சங்கங்களுக்கு சலுகை வசதியுண்டு!

வர்த்தக விசாரணைகள்:

மார்க்பெட் - MARKFED

112, பிரதான வீதி, (போன் 504) யாழ்ப்பாணம்,

தலைமையகம்: கூட்டுறவுச் சதுக்கம், 127, கிருன்பாஸ் வீதி, கொழும்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

## 1981 ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### (விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது)

1980 ஆம் ஆண்டுக்காக தலைமை அலுவலகத்தில் இதற்கு முன் பதிவு செய்யாத வழங்குநர், உற்பத்தியாளர், தொழில் ஒருங்கு செய்வோர் ஆகியவர்களிடமிருந்து 1981 ஆம் ஆண்டுக்காகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும். 1980 ஆம் ஆண்டுக்காக பதிவு இலக்கமும், அனுமதித் தகைமையும் பெற்றுள்ளோர் திரும்பி விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய அவசியமில்லை. ஆனாலும் பிரிவுகள், சிலவற்றிற்கு மாத்திரம் பதிவு செய்துள்ளோர், முன்னர் பதிவு செய்யாத ஏனைய பிரிவுகளுக்கு மாத்திரம் பதிவுசெய்தல் வேண்டும்.

கீழ்க்காணும் பிரிவுகளிலுள்ள தொடர்புடைய பொருட்களுக்காகப் பதிவுசெய்வதில் ஒவ்வொரு உப பிரிவுகளுக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் செய்துகொள்ளுதல் வேண்டும்.

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலை, காங்கேசந்துறை (யாழ்ப்பாண மாவட்டம்) புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை (புத்தளம் மாவட்டம்) இறுகுணு சீமெந்துத் தொழிற்சாலைசாலி (காலி மாவட்டம்) ஆகிய தொழிற்சாலைகளில் வழங்குநர்களை பதிவுசெய்வதற்காக அவ்வத் தொழிற்சாலைகளைச் சார்ந்த மாவட்டங்களிலுள்ள நிறுவனங்களால் விண்ணப்பங்கள் கோரப்படும். தொழிற்சாலைகளுக்காகப் பதிவுசெய்வோரின் விண்ணப்பங்கள் அவ்வத் தொழிற்சாலைகளிலுள்ள வழங்கல் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப படும் 'கவர்'களின் இடப்பக்கத்தில் மேல் "1981 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவுசெய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தலைமை அலுவலகத்திற் பதிவுசெய்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கீழே ஒப்பமிட்டவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

1980–12–30 ஆம் திகதி வரை மட்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கேற்ப விலை விபரங்களைச் சமர்ப்பிக்க இயலாதவரினதும், கொடுக்கப்பட்டுள்ள விவரக்கூற்றுகளுக்குத் தக்கவாறு பொருள்கள் வழங்கமுடியாதவரினதும் குறிப்பிட்ட நேரத்திற்கு பொருள்களை வழங்க முடியாதவரினதும் பெயர்கள் வழங்குநர் பதிவுசெய்யும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யும் போது, பதிவு செய்யும், அல்லது அகற்றும் அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்குண்டு.

**பிரிவு 2**

(அ) சீலை, சீருடைக்கான சீலை.
(ஆ) சீலை கழுவப்படும் சவர்க்காரம், நல்லெண்ணெய் கிருமிநாசினி மருந்து ஆகியவை.
(இ) காலணி மழைக்கோட்டு (தோற்பொருட்கள்).
(ஈ) தளபாடம்- பீங்கான், கரண்டி, முட்கரண்டி ஆகியவை.

**பிரிவு 3**

(அ) துப்பரவாக்கும் பொருள்கள்.
(ஆ) கட்டப்படும் கயிறும் பொதிக்கப்படும் பொருட்களும்.
(இ) மருந்து வகைகள்.
(ஈ) தீயணைக்கும் உபகரணங்கள்.
(உ) பாதுகாப்பு உபகரணங்கள (தலைக்கவசம்,கண்ணாடி ஆகியவை)

**பிரிவு 4**

(அ) மை, தூரிகை, மை பூசுவதற்குத் தேவையானவற்றை.
(ஆ) பாவுபலகைக் கலவை (சீலிங் கம்பவுன்ட்)
(இ) ஆப்பிரசிவு
(ஈ) பயர்க்லே

**பிரிவு 5**

(அ) கட்டிடங்கள்,வேலிஅடைத்தல்,வேயப்படுதற்கானபொருட்கள்
(ஆ) துப்புரவேற்பாட்டுப் பொருத்துகள், உபகரணங்கள்.
(இ) மரவகைகள் (தென்னை, பனை. பலகை ஆகியவற்றை).
(ஈ) செங்கல், மணல், கருங்கல் ஆகியவற்றை.
(உ) குழாய்களும் குழாய் பொருத்துகளும் ஆகியவற்றை.

**பிரிவு 6**

(அ) சுரை, ஆணி, தகடு, கம்பி, மீள் பெலப்படுத்தல் முதலான கட்டுமானப் பொருள்கள்.
(ஆ) விசைச்சுருள், காடினை, குறுதண்டு, வெப்பந்தாங்கி, ஈளார, துருப்பிடியாத உயர்ந்த உருக்குவகை சார்ந்த உருக்குக் கம்பிகள்.

**பிரிவு 7**

(அ) குளிரூட்டி, காற்றுச் சீராக்கி, மின் விசிறி முதலியன உபகரணங்கள்.
(ஆ) மின் பொருத்துகள் உபகரணங்கள் (வயர், கேபல், இன்ஸியுலேசன் உபகரணங்கள்)
(இ) மின்குமிழிகள்.
(ஈ) பற்றரிகள.
(உ) இலகதிரேன் உபகரணங்கள்.

**பிரிவு 8**

(அ) தயர், ரியூப், ஆகியவற்றை.

**பிரிவு 9**

(அ) உலைக்களத் தொழிற்சாலை திருத்துவதற்குரிய பொருள்கள்.
(ஆ) பொருத்துகள், காய்ச்சி ஒட்டுதல் ஆகியவற்றுக்கான கான பொருள்கள்.
(இ) பலைக்கள உபகரணங்கள்.
(ஈ) துளைகருவிவகை, பித்தளை, செப்புக் கம்பி.
(உ) இலத்திரோன்.
(ஊ) வெட்டு கருவி.

**பிரிவு 10**

(அ) எழுது கருவிவகை.
(ஆ) அலுமாரி, தட்டச்சுப் பொறி, முதலிய அலுவலக எழுது பொருள்கள்.
(இ மரப் பொருள்கள்.

**பிரிவு 13**

(அ பொறிவகை.
(ஆ) வாகன வகை.

**பிரிவு 14**

(அ) இரசாயனப் பொருள்களும், ஆய்வுகூட உபகரணங்களும்.

**பிரிவு 15**

உப-பொருள்கள் (உதிரிப்பாகங்கள்)

(அ) உராய்வு தாங்கிகள.
(ஆ) 'V' பட்டிகள்.
(இ) தரத் தடுகளும், குளிர் தகடுகளும்.
(ஈ) பட்டியிடல்.
(உ) கம்பிச் சுருள்.
(ஊ) வடி துணி.

**பிரிவு 16**

(அ) நூல்கள் முதலான வெளியீடுகள்.

**பிரிவு 17**

(அ) உருளை, இழுபொறி ஆகிய பெருவாகனங்களுக்குரிய உதிரிப் பாகங்கள.

**பிரிவு 18**

(அ) சிறிய வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள்.
(ஆ) மோட்டார் சயிக்கிள், ஸ்கூட்டர் சயிக்கிள் ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்கள்.
(இ) மிதிவண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள்.

**பிரிவு 21**

சேவைகள்

எமது விவரக் கூற்றுக்களுக்கமைய உதிரிப்பாகங்களைக் கடைச்சல் எந்திரங்களில் கடைந்து கொடுத்தலும் புதிய உதிரிப்பாகங்களை உருவாக்குதலும் (இவற்றைச் செய்வதற்கான வசதிகளைக் குறிப்பிடுக,)

**பிரிவு 22**

தட்டச்சுப்பொறி, கணிப்பீட்டுப்பொறி ஆகிய அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல்.

**பிரிவு 23**

தயர் மீளப்பழுதுபார்த்தல்.

**பிரிவு 24**

தச்சுவேலை-மரம் அரிதலும், சீவுளியிட்டு மிருதுவாக்கலும்.

**பிரிவு 25**

கட்டடங்களைக் கட்டுதலும், பழுதுபார்த்தலும்

**பிரிவு 26**

டம்பர், புல்டோசர், ரிபர், ட்ருக்டர், லோபெட் றெயிலர் முதலிய மண் வெட்டி அகற்றும் பொறிகளை வாடகைக்கு அமர்த்தல் (இப்பொறிகள் இருக்கிறதாவென்பதைக் குறிப்பிடுக.)

**பிரிவு 27**

மின்விசிறி, குளிர்சாதனப் பெட்டி, ஆகிய மின் உபகரணங்களைப் பழுதுபார்க்கும் சேவைகள்.

**பிரிவு 28**

எல்லாவகையான வாகனங்களையும் பழுதுபார்த்தல்.

**பிரிவு 29**

அச்சு வேலைகள்.

**பிரிவு 30**

ஏற்றியிறக்கற் சேவை.

**பிரிவு 31**

தையற்சேவை, வடிகுழாய்ச் சேவை.

**பிரிவு 32**

வாகனங்களின் ஆசனங்களுக்கு மெத்தை பழுதுபார்த்தற் சேவை.

**பிரிவு 33**

புளொக், இறப்பர் முத்திரைப் பொறி ஆகியவற்றைச் செய்தல், பிளாஸ்த்திக், பித்தளை, தகட்டுச் சின்னங்கள் செய்தல்.

**பிரிவு 34**

இன்கேக்டர் பழுதுபார்த்தல்.

**பிரிவு 35**

பனை, தென்னை பாச்சுமரம் தயாரித்தல்.

விண்ணப்பகாரர் கீழே தரப்பட்டுள்ள விபரங்களுடன் தேவையான தகவல்களையும் இணைத்தல்வேண்டும்,

1. விண்ணப்பிக்கும் பிரிவு:. இல: எதற்காக:. உப-பிரிவு—அ, ஆ, இ, ஈ, உ, ஊ.
2. பெயரும் முகவரியும்:-
3. தொலைபேசி இல;-
4. தொழிற் பதிவு இல:- (பதிவு செய்த பத்திரத்தின் நிழற்படத்தினை இணைத்தல் வேண்டும் )
5. தொழிலின் தன்மை:-
6. வங்கிக் கணக்கும், இலக்கமும்:-
7. கடந்த மூன்று ஆண்டுகளுக்குக் கட்டிய வருமானவரி விபரம்:-
8. கடன் வசதித் தொடர்பான விபரம்:-
9. வழங்கும் முறை பொருள்கள் பெற்று வழங்கும் விதம்:-
10. கழிவு கொடுக்கப்படுமா? என்னும் விபரம்:-
11. ஏற்கனவே இக்கூட்டுத்தாபனத்துடன் பதிவுசெய்யப்பெற்றுள்ளதா? அப்படியாயின் முன்னர் பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தைக் குறிப்பிடுக:-
12. பொருள்கள் வழங்குவதன் பொருட்டுப் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நிறுவனம் ஆகியவற்றின் விபரங்களைக் குறிப்பிடுக:-
13. தற்போது நீங்கள் பொருள் வழங்கும் நிறுவனங்களின் விபரம்:-
14. விலை விபரக்கூறுகள் சமர்ப்பிக்கப்பட்டபின் விசாரிக்கவேண்டிய திணைக்களங்கள், அல்லது தனிப்பட்ட நபர்களின் பெயர் விபரமும், தொலைபேசி இலக்கமும்.
15. பிற விபரங்கள்.

**வழங்கல் முகாமையாளர்.**

விலை கோரும் பிரிவு, இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
302, காலி வீதி, கொழும்பு-4.

7704

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி10-30, 2-00, 6-00 & 9-30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
மீனவநண்பன்

ராணி - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
ஒரு தலை காதல்
(குடும்பப் பெண்ணின் கதை)

லிடோ (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம்.ஜி.ஆர்.- சாவித்திரி
வேட்டைக்காரன்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
நினைத்தாலே இனிக்கும்

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
எம்.ஜி. ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
தனிப்பிறவி (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
50-வது நாளை நோக்கி
தினசரி 10-30 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
ஒரேவானம் ஒரேபூமி
(வண்ணக்கலர்)

ராஜா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 - 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெயகணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
சுப்ரபாதம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
யாழ்ப்பாணம் 2-வது வாரம்



செயலா ஆர்ட்ஸ் அளிக்கும்
ஒருதலை காதல்
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்!

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 7ம் திகதி
திங்கட்கிழமை
(22-12-80)

மேடம்: இலாபகரமானதினம் புதிய வாய்ப்புக்கள் ஏற்படுவதற்கு இடமுண்டு பொருளாதாரநிலை சீர்பெறும் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

இடபம்: கடன் தொல்லைகள் அதிகரிக்கும். கூட்டு வியாபாரம் ஏமாற்றத்தை தரலாம் தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் கவனமாக இருக்கவும்.

மிதுனம்: அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம் பெறும் குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

கடகம்: வாழ்க்கை தேனை இனிக்கும் சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்தும் கிடைக்கும். புதிய துறையின் மூலம் பொருளைத் தேடுவீர் உடல் நலத்திலும் நல்ல முன்னேற்றமுண்டு.

சிங்கம்: திட்டமிட்டுச் செயல்பட விரும்புவீர்கள். எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர் உடலில் சோர்விற்கு இடமேற்படும்.

கன்னி: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும் சிலருக்குப்புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். மாதுருவழிச் சுபமும் உண்டாம்.

துலாம்; மகிழ்ச்சிகரமான தினம் குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள் கணவன்-மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

விருட்சம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும் மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம் சிலருக்கு விரக்தி மனப்பண்மையும் தென்படலாம். பொறுமையுடன் நடப்பது நல்லது.

தனு: அன்பின் அணைப்பு உங்களைப் பரவசத்தில் ஆழ்த்தும். களஸ்திர வழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும் வெளியிடத்தொடர்புகளிலும் நன்மையான மாற்றங்கள் உண்டு. மகிழ்ச்சிகரமானதினம்.

மகரம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைவார்கள் மேயாடடைக்கடிதமொன்று ஏறிது பாபரப்பை ஏற்படுத்தும். தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படலாம்.

கும்பம்; தந்தை வழிப் பெருமை உண்டு. ஸ்தலயாத்திரை ஒன்றுப மேற்கொள்ளப்படலாம் குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும்.

மீனம்: பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும் அரசாங்க ஊழியரானின் பதவி உயர்வுக்கு முயற்சி எடுப்பின் வெற்றி யுண்டு. குடும்பப் பிரிவுமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
வானடக்காற்று

நாகபூஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15 9-30
சனி-ஞாயிறு 2-15
பூ மாலை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
தேவதாஸ்

A GRAND X'MAS RELEASE!
SANTHI (JAFFNA) 10-30, 2-30, 4-45, 7-00 and 9-30
How Deep Is Your Love, Night Fever Staying Alive
More than Woman Performed By The Bee Gees
JOHN TRAVOLTA ✶ KAREN CORNEY
IN
SATURDAY NIGHT FEVER
A FAMILY ENTERTAINMENT
DANCE - MUSIC - SUSPENSE - THRILL - col
வர்ணஜாலம் புரியும் மின் ஒளியில் அமெரிக்க கமல் என வர்ணிக்கப்படும் JOHN TRAVOLTA வுடன் ஆடி வும், அள்ளி வழங்கும் பொப் இசை நடனம், பொப் இசைப் பிரியர்களுக்கு ............ அரிய வாய்ப்பு!!
அருமை விருந்து!



வலைய ட்டுநு ஆடையல பயநகம் பொருட்டு இலங்கைப் பிரதிநிதியாக அண்மையில் பாங்கொக், சிங்கப்பூர், மலேசியா முதலான நாடுகளுக்குச் சென்ற திரு. வி. ரி. சிவலிங்கம், பாங்கொக் தேசிய விளையாட்டரங்கில்; அமெரிக்க தேசிய விளையாட்டுப் பயிற்சியாளர் திரு. பிரட்வில்ற், சர்வதேச அமெச்சூர் விளையாட்டுச் சங்கத்தலைவர் டாக்டர் ஜோசப், சேர்ஸ் ஆகியோருடன் இங்கு காணப்படுகின்றனர்.

## சுன்னாகம் ரேயல் வி. க.

# கரபந்தாட்ட அரைஇறுதி போட்டிகள்

(சுன்னாகம்)

சுன்னாகம் ரேயல் விளையாட்டுக்கழக வருடாந்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரைஇறுதியாட்டங்கள் இம்மாதம் 25ம்திகதி நடைபெறவிருக்கின்றன. அன்று ஆனந்த 'ஏ'யை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வராவும், ஞானகற் வி. க வை எதிர்த்து சாந்திரூபன் வி. கவும் மோதுகின்றன.

இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 5வது ஆண்டு விழாவும் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கின்றன.

சுன்னாகம் பட்டினசபை மைதானத்தில் நடைபெற்று வரும் இச் சுற்றுப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் வல்லிபுரம், ஐ. திருச்செந்தூர், வ. சி. மகாலிங்கம் ஆகியோர் கடமையாற்றுகின்றனர். கழகச் செயலாளர் திரு. சி. நடராசா இப்போட்டிக்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.

## தந்தி விண்ணப்பம் இல்லை

[சித்தன்கேணி]

சித்தன்கேணி உபதபாற்கந்தோரில் தந்தி விண்ணப்பங்கள் இல்லாமையினால் பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

உபதபால் அதிபர் பொதுமக்களுக்கு எழுதுதான் கொடுத்து உதவுவது இங்கு குறிப்பிடத்தக்கது. (=)

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

(அரியாலை)

வைத்திய சாலைகளின் கிறிஸ்தவ நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாண அரசினர் வைத்திய சாலையில் நேற்று முன்தினம் இரவு கிறிஸ்மஸ் ஒளிவிழா கொண்டாடப்பட்டது.

வைத்தியர்களும், தாதிமார்களும், ஊழியர்களும் அடங்கிய பாடகர் குழுவினர் நோயாளர்கள் சிகிச்சை பெறும் ஒவ்வொரு விடுதிக்கும் சென்று நத்தார் பாடல்களைப்பாடி நோயாளர்களுக்கு நத்தார் செய்திகளைக் கூறினர்.

இவ்விழாவில் பேராதனை, யாழ்ப்பாணப்பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ வைத்திய மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஈ)

## மருந்துகள் இல்லை

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளிக் கிராமச் சபையால் பரிபாலிக்கப்பட்டுவரும் ஆயுள்வேத சித்த வைத்தியசாலையில் போதுமான மருந்துகள் இல்லாததினால் நோயாளர் கஷ்டப்படுகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு ஏற்படுவது ஒரு சர்வசாதாரணமாகி விட்டது கடந்த மூன்று வருடங்களாக இந்த நிலை நீடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை நூல்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | 3 00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் | 2.50 |
| விநாயகர் தோத்திர மாலை | 2.50 |
| விநாயகர் அகவலும் கவசமும் | 50 |
| மார்கழிப் பாராயணம் | 2.00 |

**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


## லண்டனில் வெளியான நூல்

(லண்டன்) 'தமிழ்மணி' திருஅரங்க முருகையன் எழுதிய ''தமிழ்ச்சமும் கோரி, ஐ நா. பெருமன்றத் தில் முழக்கம்'' என்னும் தமிழ் நூல், அண்மையில், லண்டனில் வெளியிடப்பட்டுள்ளது


எண்ணம் போல் சைவ உணவை சுவைத்து மகிழுவதற்கு
அசோக் பவான்
திறமான என் ஆ ... நாட்டரிசிக்கு
அசோக் பவான்
கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான பயணச் சேவைக்கு
**அசோக் பவான்**
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 6095


மன்னார் மாவட்டத்தில்

# 108 பேருக்கு காலரா: 5 பேர் இதுவரை பலி!

(மன்னார்) மன்னார்-கரிசல் பகுதியில் 10 வயதுச் சிறுவன் ஒருவர் காலரா நோய்க்குப் பலியாகியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு மலேயாண்டி பூராசா என்ற இச் சிறுவன் மரணமானார்.

மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையிலுள்ள காலரா வார்ட்டில இதுவரை 14 பேர் வயிற்றோட்டம் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 108 பேருக்குக் காலரா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

5 பேர் பலி

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 5 பேர் காலரா நோயினால் இறந்துள்ளனர். (அ)


**அறிவித்தல்**

எங்கள் ஐயாவே, நீங்கள் எங்கிருந்தாலும் உடனடியாகவரவும். உங்கள் பெண் பிள்ளைகள் கவலையுடன் இருக்கிறார்கள்.

உங்கள் மகன்
த. கதிரவேலு
8-ம் வட்டாரம்,
(7716) வேலணை.


## முன்னாள் .....
(5-பக்கத் தொடர்ச்சி)

ஆஜர்செய்யப்பட்ட போது சந்தேக நபர் ஏற்கனவே 17 குற்றங்களுக்காகச் சிறை சென்று திரும்பியவர் எனவும் அவர் ஒரு ஐ. ஆர். சி. எனவும் பொலிசாரால் தெரிவிக்கப்பட்டது.

நீதவான் சந்தேக நபரைக் கடுமையாக எச்சரித்தபின் 2 சைக்கிள் திருட்டுக்கும் தலா 2 வருடக் கடுமியச் சிறைத்தண்டனை விதித்து ஒன்றன்பின் ஒன்றாக தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் தீர்ப்பளித்தார். (கொ)

## கொள்ளை...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டுக்கோட்டைத் தபால் நிலையத்துக்குச் செல்வதையும் காரிலிருந்து பணப்பை இறக்கப்படுவதையும் அவதானித்துக்கொண்டிருந்த கொள்ளையர்கள் காரை நோக்கி ஓடிச் சென்று பணத்தைக் கொள்ளையடித்ததுடன் 3 முறை கைத்துப்பாக்கியாலும் சுட்டனராம்.

காரின் ரயரை நோக்கி ஒரு சூடும், தபால்நிலைய யன்னலை நோக்கி இரண்டாவது சூடும், சாரதியை நோக்கி மூன்றாவது சூடும் சுடப்பட்டதாம்.

80 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட அதேவேளை மேற்படி காருக்குள் மேலும் 70 ஆயிரம் ரூபா இருந்ததாக வும், காரைக் கடத்திச் செல்வதற்கு அவர்களுக்குக் கால அவகாசம் கிடைக்காததால் அவர்களால் அப்பணத்தைக் கைப்பற்றமுடியாது போய்விட்டதாகவும் யாழ். தபால் நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொள்ளை நடைபெற்ற வேளையில் வட்டுக்கோட்டைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலுள்ள தொலைபேசித் தொடர்பும் துண்டிக்கப்பட்டிருந்ததாம். (கொ-கு)

## பணயக்கைதி...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனையை அப்பொழுது தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் பல வங்கிகளிலும் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் 2,400 கோடி டாலர்களையும் அல்ஜீரியாவிடம் அமெரிக்கா ஒப்படைக்க செய்ய வேண்டும் என்றும், இது நடக்கும்பட்சத்தில் உடன்விடுதலைசெய்யப்படுவார்கள் என்றும் ஈரான் கூறியுள்ளது.


... றைக்கோடிங் செய்து நன்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவைப்படுகிறார்கள். இம் மாதம் 31-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

**மனேஜர்**
37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7517, 7403
7718



''யூனியன்''

# நெல் உலர்த்தும் இயந்திரம்

அவித்த நெல்லை உலர்த்துவதற்கு பிரத்தியேகமாகச் செய்யப்பட்டது. நெல்லை திரும்பத் திரும்ப இவ்வியந்திரத்தினுள் செலுத்தி, சாம்பல் புகையற்ற இளம் சூடான காற்றால் நீர்த்தன்மை அகற்றப்படுகின்றது. இதற்கென உமியில் எரியும் இணைத்து அமைக்கப்பட்ட அடுப்பு மூலம் வெப்பக் காற்று பெறப்படுகின்றது.

இது இலகுவாக இயங்கக்கூடியதும், 4 தொன் (200 புசல்) நெல்லை 5 மணித்தியாலங்களில் உலரவைக்கும் தன்மையுடையது.

### விசேஷ அம்சங்கள்

(1) நெல் குத்தும் விகிதம் இரண்டு மடங்காக்குதல்.
(2) அரிசியின் சுவை குன்றாதிருத்தல்.
(3) விசேஷமாகப் பொருத்தப்பட்ட பிளிகள் மூலம் பெறப்படும் சம காயும் தன்மை.
(4) இணைத்துப் பொருத்தப்பட்ட எலிவேட்டர் நெல்லைத் துரிதமாக ஏற்றவும் இறக்கவும் துணை புரிதல்.
(5) எலிவேட்டரில் பொருத்தப்பட்டிருக்கும் வழிமாற்றி காய்ந்த நெல்லை நேராக குழாய் மூலம் நெல் குத்தும் இயந்திரத்திற்கு கொண்டுசெல்லும் தன்மை.
(6) உமியை சாம்பலுடன் கலந்து அடுப்பினுள் கடத்தும் சாதனம்.
(7) உயரம் 34 அடி. உமியில் இயங்கும் வெப்பசூளையுடன் இவை அமைய தேவைப்படும் நிலப்பரப்பு 10' X 20'.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்கி 1981 ஜனவரி மாதம் முதல் இரும்பு புனைவு வேலைகள் (FABRICATION) பாரம் எடுக்கப்படும்.

Estd. 1922

# சாமுவேல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டட்
206, 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 462.



# OK TRAVEL SERVICE
## ஓ.கே ரவல் சேவிஸ்
நடாத்தும்

யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட மாணவருக்கான பாடசாலை சென்றுவரும் சேவை. ஒரு பிள்ளைக்கு வீட்டில் இருந்து பாடசாலைக்கு செல்லும் தூரத்தைப் பொறுத்துக் கட்டணமாக ரூபா 50 தொடக்கம் ரூபா 75க்குள் அறவிடப்படும்.

விபரங்களுக்கு:
கிளைக் காரியாலயம்
**ஓ.கே ரவல் சேவிஸ்**
70, ... வீதி (நிசா ரோட்ஸ்),
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 648

விண்ணப்பப் படிவங்களை எமது ஸ்தாபனத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். 7699



மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு ☆ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட் ☆ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக் சுற்றுலாக்கள் ☆ பாஸ்போர்ட்

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News paper at the General Post Office Sri Lanka. under No: GB 8948/73. The Eelanaadu P. B No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org